செ.வெ.எண்:48 நாள்:25.10.2021

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் போச்சம்பள்ளி, ஊத்தங்கரையில் ரூ.3 கோடியே 83 இலட்சம் மதிப்பில் 2 ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் தலா 1000 மெட்ரிக் டன் கிடங்கும், பர்கூரில் ரூ.2 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் என மொத்தம் ரூ.5 கோடியே 83 இலட்சம் மதிப்பிலான கட்டிடங்களை காணொலி காட்சி வாயிலாக இன்று (16.11.2021) திறந்து வைத்தார்கள்.**

**அதனைத்தொடர்ந்து, பர்கூரில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் குத்து விளக்கேற்றி விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் போச்சம்பள்ளி, ஊத்தங்கரையில் ரூ.3 கோடியே 83 இலட்சம் மதிப்பில் 2 ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் தலா 1000 மெட்ரிக் டன் கிடங்கும், பர்கூரில் ரூ.2 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் என மொத்தம் ரூ.5 கோடியே 83 இலட்சம் மதிப்பிலான கட்டிடங்களை காணொலி காட்சி வாயிலாக இன்று (16.11.2021) திறந்து வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, பர்கூரில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் குத்து விளக்கேற்றி விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் இனிப்புகளை வழங்கினார்.

பர்கூர் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் முதல் மற்றும் இரண்டாம் தளங்களில் அலுவலகம், அலுவலர்களின் அறைகள், விவசாயிகளுக்கான கருத்தரங்கம் மற்றும் பயிற்சி கூட்ட அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின்போது, வேளாண்மை இணை இயக்குநர் திரு.ராஜேந்திரன், செயற்பொறியாளர் வேளாண் பொறியியல் துறை திரு.எம்.பாஸ்கரன், உதவி செயற்பொறியாளர் திரு.சிவக்குமார், வேளாண்மைத்துறை துணை இயக்குநர் திரு.அகண்டராவ், மாவட்ட ஆட்சித்தலைவர் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.கிருஷ்ணமூர்த்தி, உதவி இயக்குநர் தோட்டக்கலை திரு.என்.அருள்முருகன், வட்டாட்சியர் திரு.பிரதாப், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.அண்ணபூரணி, திரு.வெங்கட்ராம்கணேஷ், பர்கூர் ஒன்றிய குழு தலைவர் திருமதி.கவிதா கோவிந்தராஜ், தோட்டக்கலைத்துறை, வேளாண்மைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**